# VANIGALAYAM

வணிகலயம்

වණිගලයම්

வணிகம் 01

15.07.2015



## அரச போக்குவரத்து பேருந்துகளின் நேர அட்டவணை

## பங்குச்சந்தை ஒரு எதிர்கால முதலீடு

## வேலைவாய்ப்பு

## சாதனை நாயகன் வறுமை நிலையில் இருந்து முன்னேற்றம் அடைந்த தொழிலதிபரின் ஸக்ஸஸ்டோரி

## விற்கலாம் வாங்கலாம்

## விசயத்துடன் விவசாயம் ஜப்பானின்

## இலங்கையின் வடபுலத்தின் பொருளாதாரநடவடிக்கைகள் பற்றிய ஒரு நோக்கு

## மணமகள் மணமகன் தேவை

# ஆசிரியர் உள்ளம்......

வாசகர்களுக்கு வணக்கம் உங்கள் கரங்களில் இப்போது தவழ்கின்றது வணிகலயம்என்ற வணிக இதழியல் சஞ்சிகை.

புதியதென்று உலகில் எதுவுமில்லை இருப்பவற்றில் வித்தியாசமாகவும் புதுமையாகவும் ஒன்றினை உருவாக்க முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையின் வெளிப்பாடே உங்கள் கரங்களில் உள்ள வணிக இதழியல் சஞ்சிகை ஆகும்.

தொடர்பாடலின் தேவை எழுந்ததையடுத்தே ஆதிகால மனிதன் பேசவும் எழுதவும் உந்தப்பட்டான். அதன் தொடர்ச்சி
இன்று இணையம் வரை அது நாளை ?????

முரண்பாட்டுச் சூழலில் நாம் 30 வருடங்களை கழித்துள்ளோம். ஒரு சந்ததியே முரண்பாட்டுக்குள் சிக்கி சின்னா பின்னமாகிவிட்டது. அது சரியா தவறா என்பதற்கு விடை காண்பது எமது நோக்கமல்ல தேசிய இனப்பிரச்சினைகளையும் அதன் தொடர்ச்சியான முரண்பாடுகளையும் அடிப்படையாக வந்த செய்தி அறிக்கையிடலை நாம் கடந்த காலங்களிலும் சமகாலத்திலும் வாசித்து வந்திருக்கின்றோம்

அவற்றிலிருந்து நாம் முற்றிலும் வேறுபட்டவர்களாக நாளந்த வாழ்க்கையில் ஒரு சராசரி மனிதனின் மிக முக்கிய தேவையான பொருளாதாரத்தினை ஈட்டுவதற்கான வழியை காட்டுவது இச் சஞ்சிகை சஞ்சிகையின் நோக்கங்களில் ஒன்றாகும்

வாழ்க்கை செலவு அதிகரித்துள்ள இன்றைய சூழலில், இருக்கும் பணத்தை சரியான வழியில் செலவு செய்யவும் அல்லது முதலீடு செய்யவும் பணத்தை சேமிக்கவும் பணத்தை பாதுகாக்கவும் பணத்தை தேடவும் வாசகர்களுக்கு வழி காட்டும் இலக்கில் வாணிப வர்த்தகம் துறை சார்ந்த வல்லுனர்களின் உதவி மற்றும் ஆலோசனையுடன் (முதலில்) மாதம் ஒரு இதழாக வணிக இதழியல் சஞ்சிகை வெளிவருகின்றது.

வணிகலம் என்ற வணிக இதழியல் சஞ்சிகை ஊடக சாதாரண வியாபாரிகள் தொடக்கம் இறம்குமதி ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபடும் வர்த்த்தகர்கள் வரை உங்களது சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ளமுடியும்

வணிகலயம் என்ற இந்த வணிக இதழியலின் வாசகர்களாகிய நுகர்வோர் தமது கையிருப்பிற்கு ஏற்ற வகையில் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு சஞ்சிகை வழிகாட்டுகின்றது. விருத்திக்கு அல்லது அபிவிருத்திக்கு தொடர்பாடல் என்பது இன்றியமையாத ஒன்றாகும்

எனவே வட கிழக்கெங்கும் உள்ள தமிழ் பேசுகின்றவர்களுக்கிடையில் வணிகம்சார்ந்த தகவல்களை பரிமாறிக் கொள்வதற்கான அடிப்படை தொடர்பாடலுக்கான வலைபின்னலை உருவாக்குவதே எமது பிரதான நோக்கமாகும்.

இந்த வலை பின்னல் ஊடாக வியாபாரிகளையும் நுகர்வோரையும் ஒரு கோட்டில் சந்திக்க வைக்கின்றோம். Business journal அல்லது வர்த்தக இதழியல் என்று மேற்குலகிலும் ஏன் எமது அயல் நாடான இந்தியாவிலும் கோலோச்சியுள்ள நிலையிலேயே இலங்கையில் வட கிழக்கில் தமிழ் பேசும் மக்களை இலக்கு குழுவாக கொண்டு வர்த்தக இதழ் வெளிவருகின்றது.

இலவசமாக விநியோகிக்கப்படும் வர்த்தக இதழான வணிகலயம் இதழினை வெற்றிகரமாக கொண்டு செல்ல உங்களின் ஆசியையும் ஆலோசனையையும் ஆதரவினையும் நாடி நிற்கின்றோம். மீண்டும் அடுத்த இதழில் வாசகர்களை சந்திக்கின்றேன்.
அன்புடன் ஆசிரியர்..........














# சாதனை நாயகன்



பெயர். துரைச்சாமி குருநாதசிவம்

அப்பா. துரைச்சாமி

அம்மா. துரைச்சாமி நாகமுத்து

இடம் புங்குடுதீவு

துரைச்சாமி குருநாதசிவம் இளமைக் கல்வியினை புங்குடுதீவு ஸ்ரீ கணேசா மகாவித்தியலயத்தில் கல்வி பயின்றார் குடும்பத்தின் வறுமைக் காரனமாக விவசாயக் குடும்பத்தினை சேர்ந்த துரைச்சாமி குருநாதசிவம் தன் கல்வியினை எட்டாம் தரத்துடன் நிறுத்த வேண்டிய நிலைக்குள்ளானார்

அதன் பின்னர் குருநாதசிவம் கொழும்பு பாணாந்துறையில் அப்போது வியாபாரம் செய்து வந்த குருநாதசிவத்தின் சித்தப்பா நடராஜாவின் வியாபாரத்தில் இரண்டு வருடங்களாக வேலை செய்துள்ளார் பின்னர் கொழும்பு புறக்கோட்டையில் அப்போது பிரபல வர்த்தகரான இந்தியா தூத்துக்குடியை சேர்ந்த செல்வராஜா நாடார் என்பவரிடம் 7 வருடங்களாக மாதாந்த சம்பளத்திற்கு வேலை செய்துள்ளார்

அதன் பின்னர் சுயமாக தொழில் செய்ய வேண்டும் என்ற அவருக்குள் இருந்த ஆசை காரணமாக தனது வேலையை விட்டு விலகி சொந்த ஊரான புங்குடுதீவிற்க்கு திரும்பினார்

சொந்தமாக தொழில் செய்யும் ஆசையும் வேகமும் இருந்த போதும் துரைச்சாமி குருநாதசிவத்திடம் பணம் இல்லாததால் குழப்பமடைந்தார். ஏனையவர்களைப் போலவே சுயதொழில் செய்யும் ஆசையையும் ஆனால் பணம் இல்லாத நிலையினை அம்மாவான நாகமுத்துவிடம் கொட்டித் தீர்த்திருக்கின்றார்.

மகனின் கவலையால் கலங்கிப்போன அம்மா புங்குடுதீவில் அப்போது செல்வந்தராக விளங்கிய ஒருவரிடம் 2000 ரூபாவை கடனாக பெற்று மகனின் சுயதொழில் முயற்சிக்கு வித்திட்டு ஆசீர்வதித்து அனுப்பினார்.

அம்மா கொடுத்த 2000 ரூபா பணத்துடன் பல கனவுகளோடு மீண்டும் கொழும்பு நோக்கி பயணமானார் நமது சாதனை நாயகன்.

சாதிக்க வேண்டும் என்ற வேகமும் வெறியும் குருநாதசிவத்திடம் ஏராளமாகவே இருந்தது அதனை நோக்கிய பயணத்திற்கான திட்டமிடலோடு கொழும்பு சென்று கொழும்பில் பணியாற்றிய போது கிடைத்த அறிமுகமான வர்த்தகர்களிடம் கதைத்து குறைந்த விலைக்கு பொருட்களை கொள்வனவு செய்து மிகக் குறைந்த ஆதாயம் வைத்து பொருட்களை விற்பனை செய்து லாபம் ஈட்டினார் எமது சாதனை நாயகன்

பின்னர் மெதுவாக வியாபாரத்தினை அதிகரித்து இரவு பகல் பாராது அயராது உழைத்து வருமானத்தினை மெதுவாக பெருக்கினார். அவ்வாறு மெதுவாக பெருக்கிய பணத்தை முதலீடாக வைத்து 1976 ஆம் ஆண்டு கொழும்பில் றோயல் இன்டஸ்றீஷ் ஸ்தாபனத்தை ஆரம்பித்தார்

குருநாதசிவத்தின் சுயதொழில் கனவின் பிள்ளையார் சுழியாக றோயல் குளுக்கோஸ் என்ற பெயரில் வெளிநாடுகளில் இருந்து வரும் குளுக்கோஸினை பொதி செய்து விற்பனை செய்தார். அதன் தரத்தை அறிந்த நுகர்வோரும் றோயல் குளுக்கோசை கொள்வனவு செய்ய ஆரம்பித்தனர். அதனுடன் நின்றுவிடவில்லை நமது சாதனை நாயகன் மேலும் 15 பொருட்களை உற்ப்பத்தி செய்து பெரிய வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவகங்களுக்கும் விநியோகம் செய்தார்

அதன் பின்னர் பிரபலமாகி நம் நாடு முழுவதும் குருநாதசிவத்தின் தயாரிப்பான றோயல் இன்டஸ்றீஸ் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டது

அயராத முயற்சியாலும் உழைப்பாலும் திட்டமிடலாலும் முன்னேற்றப்பாதையில் வெற்றி நடைபோட்டு கொண்டிருந்த போது தான் யாருமே எதிர்பாராது 1983 ஆம் ஆண்டு நடந்தேறிய யூலைக்கலவரத்தால் சொத்துக்களை இழந்தார் குருநாதசிவம்.




அதன் பின் மீளவும் சொந்த ஊரான புங்குடுதீவு திரும்பிய குருநாதசிவம் சித்தியின் வீட்டில் தனது மனைவி மக்களுடன் வசித்து வந்தார்.

ஆயினும் மீண்டும் தனது சொந்தத் தொழிலினை ஆரம்பிப்பதற்கு பணம் இல்லாத நிலையேற்பட்டது. முன்னர் பணம் இல்லையென்றவுடன் அம்மா உதவினார் இப்போது கணவனின் கவலையைக் கண்ட மனைவி அம்பிகாவதி தாலி தொடக்கம் எல்லா நகைகளையும் கழட்டி கணவனிடம் கொடுத்து மீண்டும் பழைய நிலையை அடைய உங்களால் முடியுமென்ற நம்பிக்கையையும் கொடுத்தார்.

மனைவியின் தாலிக்கொடி மற்றும் நகைகளை விற்றுவிட்டு மீண்டும் கொழும்பு சென்று தனது றோயல் இன்டஸ்றீஸின் உற்பதிகளை ஆரம்பித்தார் நமது சாதனை நாயகன்

பின்னர் அவரின் உற்பத்தியினை கொழும்பில் இருந்து இறக்குமதி செய்து யாழ்ப்பாணம் கொண்டு வந்தார் மீள யாழ்ப்பாணத்தில் சைக்கிலில் அவரது தயாரிப்புகளை யாழ்மாவட்டம் முழுவதும் குறிப்பாக வலிகாமம் வரை கொண்டு சென்று அங்குள்ள வர்த்தக நிலையங்களுக்கு விற்பனை செய்தார் மீள சந்தையினை மெதுவாக தன் வசப்படுத்தினார்.

இன்டஸ்றீஸின் உற்பத்தியான றோயல் குழுகோசிஸின் தரத்தினை மக்கள் முதலே அறிந்திருந்த காரணத்தினாலேயே இலகுவாக சந்தைப்படுத்த முடிந்தது. ஆயினும் சாதனை நாயகன் சைக்கிலிலேயே கொண்டு சென்று விற்பனை செய்து வந்தார்.

மீண்டும் ஒன்றில் இருந்து ஆரம்பித்து சிகரத்தை அடைந்தார் சாதனை நாயகன் துரைச்சாமி குருநாதசிவம் இப்போது மீண்டும் சகல வசதிகளுடனும் இன்டஸ்றீஸின் உற்பத்திகள் நாடெங்கும் விற்பனையாகிக்கொண்டு வருகிறது

ஒரு மனிதன் முயற்சி செய்தால் எதையும் சாதிக்க முடியும் அதற்கு கால நேரம் தடை இல்லை என்பது இவரது கருத்தாகும்


பொபி ஊது பத்திகள்
நாட்டின் சகல இடங்களிலும் விற்பனையாகிக்கொண்டிருக்கின்றது.
பொபி ஊது பத்தியின் உற்பத்திகளில்
இப்போது வேலும் மயிலும் ஊதுபத்திகளில்
இரண்டு வாசனைகள் 50 குச்சிகள்.
ஊதுபத்தி என கேட்காமல் பொபி ஊதுபத்தி தயாரிப்புகளில்
வேலும் மயிலும் என கேட்டு வாங்குங்கள் வாங்குங்கள்.


ஸ்ரீ லக்ஷ்மி நாராயணா சவுண்ட்
பதிவு இல. 6889 (P.S) VA/AD/DI/U/N-3567
மங்கள நிகழ்வுகள், பொதுவைபவங்கள் ,மரண அறிவித்தல்கள்
போன்றவற்றுக்கான ஒலி, ஒளி சேவைகளும் விளம்பர அறிவித்தல்
ஒளிப்பதிவு சேவைகளும் எம்மிடமுண்டு
இல.06, 1ம் ஒழுங்கை, பிரதான வீதி,
மகாறம்பைக்குளம், வவுனியா.
தொடர்புகளுக்கு : 077 6295396, 024 2225090


நிலா சைவ உணவகம்
முற்றிலும் குளிரூட்டப்பட்டது. வட இந்திய தென்னிந்திய மற்றும்
சைனிஸ் உணவுகளை தூய்மையாக உண்டு மகிழலாம்.
25 தோசை வகைகள், 6 சுப் வகைகள். பன்னீர் காளான் உட்பட
100 க்கும் மேற்பட்ட கறிவகைகள், இனிப்பு வகைகள் என ஏராளம்... ஏராளம்....
குளிரூட்டப்பட்ட பிரத்தியேக அறைகளில் விசேட கவனிப்புக்களுடன்
சுவையான தூய்மையான சைவ உணவினை உண்டு மகிழலாம்.
யாழ் நகர்புறத்தில் ஓடருக்கான உணவினை
இலவச போக்குவரத்துடன் விநியோகம்
செய்கிறார்கள்.
இல. 60, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலை பேசி :021 2229946




ஓர் தொழில் முயற்சியில் எம்மை இணைத்துக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தினை பங்குகள் அதனைக் கொண்டுள்ளவர்களுக்கு வழங்குகின்றது. மூலதனத்தின் சம அளவிலான ஒரு பகுதி பங்கு எனப்படும். இப்பங்குகளைக் கொண்டுள்ளவர்கள் பங்குதாரர்கள் எனப்படுவர். பங்குளில் முதலீடு செய்யவிரும்பும் முதலீட்டாளர்கள் பின்வரும் இரண்டு வழிகளில் பங்குகளில் முதலீட்டினை மேற்கொள்ளலாம்.

கம்பனியிடமிருந்து நேரடியாக முதலீட்டாளர்கள் பங்குகளினைக் குறித்த விலையில் பெற்றுக்கொள்ளுதல் ஆரம்ப அல்லது முதலாம் தரப்பங்குச்சந்தை எனவும்,

முதலீட்டாளர்கள் தாம் (ஆரம்பப்பங்குச்சந்தையில் பெற்ற)கொண்டுள்ள பங்குகளினை தமக்கிடையே சந்தை விலையில் சட்டரீதியாக பரிமாற்றம் செய்துகொள்ளும் தளம் அல்லது இடம் பங்குச்சந்தை/இரண்டாம் தரச்சந்தை எனவும் வகைப்படுத்திக் கொள்ளமுடியும்.

### கொழும்பு பங்குப்பரிவர்த்தனைColombo Stock Exchange

இலங்கையில் பங்குச்சந்தை நடவடிக்கைளுக்குத் தேவையான அடிக்கட்டுமான வசதிகளை வழங்கி,பரிமாற்றங்களை முறைமைப்படுத்த, இலங்கைப் பிணைகள் பரிவர்த்தனையில் அனுமதி பெற்ற சட்ட ஆளுமையுடைய நிறுவனம், கொழும்புபங்குப்பரிவர்த்தனை எனப்படும்.

இந்நிறுவனமானது பங்குப்பரிமாற்றல் தீர்வகச்செயற்பாடுகளை செம்மையாக நிறைவேற்ற வசதியாக மத்தியவைப்புத்திட்டக் கம்பனியினை (CDS) துணைக்கம்பனியாக கொண்டுள்ளது.

தற்போது 294 பட்டியல்படுத்தப்பட்ட கம்பனிகளையும் 15 அங்கத்துவ நிறுவனங்களையும் மற்றும் 19வியாபார அங்கத்துவ நிறுவனங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

### எதிர் காலத்திற்கான முதலீடு–பங்குச்சந்தை முதலீடுகள்

சிறந்த முதலீட்டினைத் தெரிவுசெய்து எதிர்காலத்திற்காக முதலீடு செய்வதன் ஊடாக எமது வாழ்க்கைத்தரத்தினை உயர்ந்த நிலையில் எம்மால் பேண முடிகின்றது. எதிர்கால நிதி தேவைகளை முன் உணர்ந்து நிகழ்காலத்தில் கிடைக்கின்ற வருமானத்திற்கு ஏற்ப முறையானதும் தொடர்ச்சியானதுமான முதலீட்டு முறைகளில் (Systematic Investment Plan) பங்குகளில் நீண்டகாலமற்றும் மத்திமகாலத்திற்கு முதலீடு செய்யவேண்டும்.

இங்கு நடைமுறையில் உள்ள முதலீட்டு வருமான மட்டத்தினை வருமான நியமங்களாகக் கொண்டு, முதலீட்டு நோக்கத்தினையும் , வருமானக்கிடைப்பனவு மற்றும் ஏற்கக்கூடிய அல்லது தாங்கக் கூடிய ஆபத்து மட்டங்களையும் இணைத்து தீர்மானிக்கப்படல் வேண்டும்.

இந்தவகையில் பங்குச்சந்தை முதலீடுகள் நீண்டகாலத்தில் ஆரோக்கியமானதும், ஆபத்துக்கு நிகரான வருமானத்தினையும் கொடுக்கவல்லவை. அந்தவகையில் பங்குச்சந்தையில் உள்ள கம்பனிகளின் பங்குகள் கொண்டுள்ள விசேட சிறப்பியல்புகளின் அடிப்படையில் வகைப்படுத்தி முதலீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்ளவேண்டும். அவற்றை பின்வருமாறு வகைப்படுத்த முடியும்.

### வருமானப் பங்குகள்( Income Shares)

ஒப்பீட்டளவில் சில கம்பனிகளின் பங்குகள் முதலீட்டாளர்களுக்கு ஆண்டுதோறும் தொடர்ச்சியான மற்றும் நிலையான வருமானத்தினை ஈட்டிக்கொடுக்கின்றன. இத்தகைய கம்பனிகளின் வரலாற்று ரீதியாக தொடர்ச்சியாக பங்கு லாபத்தினை வழங்கிவருவதனை அவதானிக்க முடியும்.

### பெறுமதிப்பங்குகள் (Value Shares)

இத்தகைய பெறுமதிப் பங்குகளையுடைய கம்பனிகளின் செயற்பாட்டு மதிப்பீடுகள் உயர்வானதாக அமைகின்றன. ஒப்பீட்டளவில் சந்தையில் தீர்மானிக்க வேண்டிய விலையினைக் காட்டிலும் குறைவானதாக விலை அமைந்திருக்கும். கொடுக்கின்ற விலைக்கு தகுதியானது என நினைக்கத்தோன்றும். குறிப்பாக விலை உழைப்பு விகிதமானது குறைவாகவும், பங்குலாப விளைவு வீதமானது உயர்வாகவும் காணப்படும்.

### சுழற்சிப் பங்குகள் (Cyclical Shares )

நாட்டின் பொதுவான பொருளாதாரப் போக்கிற்கு ஏற்பமாற்றமடையக் கூடிய கம்பனிகளின் பங்குகள் சுழற்சிப்பங்குகள் எனப்படும். இங்கு பொருளாதார மலர்ச்சிக் காலத்தில் பங்குகளின் விலைகள் ஏறு முகத்தினையும், மாறாக பொருளாதார மந்தநிலையில் பங்குகளின் விலைகள் இறங்கு முகத்தினையும் வெளிப்படுத்துகின்றன. இச்சுழற்சி தொடர்ச்சியாக மாறிமாறிவருவதை அவதானிக்க முடியும்.

### வளர்ச்சிப் பங்குகள் (Growth Shares)

சாதாரண கைத்தொழில் துறைசார் கம்பனிகளுடன் ஒப்பிடுகையில் சில தொழில்துறை சார்ந்த கம்பனிகள் அதிவேக வளர்ச்சி வீதத்தினை வெளிப்படுத்தவல்லவை. இத்துறைசார் கம்பனிகளின் பங்குகள் மிகக்குறைந்த அளவிலான பங்குலாபம் வழங்குகின்றன அல்லது பங்குலாபம் வழங்குவதில்லை. இங்குகம்பனியின உழைப்பானது அதன் விரிவாக்கத்திற்கு மீள்முதலீடு செய்யப்படுகின்றது.

### பாதுகாப்புப் பங்குகள் (Defensive Shares)

சுழற்சிப்பங்குகளில் இருந்து முற்றாக வேறுபட்ட தன்மையினைக் கொண்ட பங்குகள் பாதுகாப்புப்பங்குகள் எனப்படும். பொதுவான பொருளாதாரத்தின் போக்குக்கு ஏற்ப மாற்றமடைவதில்லை அதாவது அத்தியாவசியப் பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்கின்ற கம்பனிகளின் பங்குகளைக் குறிப்பிடலாம். Eg;- உணவு,மதுபானம்,காப்புறுதி போன்ற நிறுவனங்களின் பங்குவிலைகள் பொருளாதார மந்தகாலத்திலும் பாரிய சரிவினைச் சந்திப்பதில்லை.

### ஊகப்பங்குகள் (Speculative Shares)

பெறுமதிப்பங்குகளில் இருந்து முற்றிலும் வேறுபட்டது. சிறந்த வலுவான நிதியியல் பெறுபேற்றினை கொண்டிருக்காத கம்பனிகளின் பங்குவகையினைச் சார்ந்தது. கம்பனியினால் வெளிப்படுத்தும் எதிர்கால வளர்ச்சியானது அடிப்படையில் பொருத்தமற்றதாக அமைந்து காணப்படும். இருந்தும் பாரிய விலை அசைவுகளை குறித்த காலத்திற்குள் வெளிப்படுத்தியிருக்கும்.

### பங்குமுதலீட்டுப் பிரதிலாபங்கள்

1) பங்குலாபம் Dividend
2) மூலதன லாபம் Capital Gain
3) பணம் சாரா அனுகூலங்கள் Scrip Dividend
4) உரிமைப்பங்கு வழங்கல் Right issue

கம்பனிகள் வருமானத்தில் குறித்த பகுதியினை பங்குதாரர்களுக்கிடையில் பணமாக பகிர்ந்து வழங்குகின்றன. இது பங்குலாபம் என அழைக்கப்படும். ஒரு பங்கிற்கு இத்தனை ரூபாவீதம் பங்குலாபம் வழங்கப்படுகின்றது.

உழைப்பினை அதன் உரிமையாளர்களுக்கு பணமாக பகிர்ந்து வழங்காது மேலதிக பங்காக வழங்கும் அது பணம் சாரா நன்மைகள் என கொள்வர்.

மேலதிகமாக பங்குகளை அதன் உரிமையாளர்களுக்கு முன்னுரிமையடிப்படையில் கழிவுவிலையில் ஒதுக்கிவழங்கினால் அது உரிமைப்பங்கு வழங்கல் எனவும். கம்பனிகளின் பங்குகளை வியாபாரநோக்கில் பரிமாற்றிக்கொள்ளும் போது பங்கின் கொள்விலையினைக் காட்டிலும் அதன் விற்பனை விலை அதிகரித்துச்செல்லுதல் மூலதனலாபத்ததினை ஈட்டித்தரும்.

மேற்குறித்த பிரதிபலன்களை முதலீட்டாளர்கள் பெற்றுக் கொள்ள ஒருவர் தம்மை பங்குதாரர்களாக உருவாக்கிக்கொள்ள வேண்டும். அதற்கு அடிப்படையாக தம்மை பங்குப்பரிவர்த்தனையில் பதிவுசெய்துகொள்ள வேண்டும். உங்கள் அடையாளத்தினை தேசிய அடையாள அட்டையின் உதவியுடன் உறுதிப்படுத்தி, போட்டோ பிரதியினை வழங்க பதிவினை இலவசமாக மேற்கொள்ள முடியும்.

சுமன்




## மணமகள் தேவை

30 வயதுடைய சுவாதி நட்சத்திரம், செவ்வாய் குற்றமற்ற கொலன்ட நாட்டு பிரஜாவுரிமை உடைய சைவ வெள்ளால மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்புகளுக்கு 077 8939 397.

40 வயதுடைய கேட்டை நட்சத்திரம், செவ்வாய் குற்றமற்ற லண்டன் பிரஜாவுரிமை உடைய சைவ வெள்ளால மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்புகளுக்கு 077 8939 397.

36 வயதுடைய ரேவதி நட்சத்திரம், செவ்வாய் குற்றமற்ற லண்டன் பிரஜாவுரிமை உடைய சைவ வெள்ளால மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்புகளுக்கு 077 8939 397.

37 வயதுடைய மிருகசிரிடம் நட்சத்திரம், செவ்வாய் குற்றமுடைய கனடா பிரஜாவுரிமை உடைய சைவ வெள்ளால மணமகனுக்கு மணமகள் தேவை தொடர்புகளுக்கு 077 8939 397

34 வயதுடைய மூல நட்சத்திரம் செவ்வாய் குற்றமுடைய அரச உத்தியோகத்தில் இருக்கும் சைவ வெள்ளால பட்டதாரி மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்புகளுக்கு 077 8939 397.

32 வயதுடைய புரட்டாதி நட்சத்திரம், செவ்வாய் குற்றமற்ற கனடா பிரஜாவுரிமை உடைய சைவ வெள்ளால மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்புகளுக்கு 077 8939 397.

30 வயதுடைய புனர்பூசம் நட்சத்திரம் செவ்வாய் குற்றமுடைய அரச உத்தியோகத்தில் இருக்கும் பட்டதாரி சைவ வெள்ளால மணமகளுக்கு வெளிநாட்டு பிரஜாவுரிமை பெற்றுள்ள மணமகன் தேவை. தொடர்புகளுக்கு 077 8939 397.

29 வயதுடைய புரட்டாதி நட்சத்திரம் செவ்வாய் குற்றமுடைய cima படித்த உத்தியோகத்தில் உள்ள சைவ வெள்ளால மணமகளுக்கு வெளிநாட்டு பிரஜாவுரிமை பெற்றுள்ள மணமகன் தேவை. தொடர்புகளுக்கு 077 8939 397.

34 வயதுடைய உத்தரம் நட்சத்திரம் செவ்வாய் குற்றமற்ற அரச உத்தியோகத்தில் உள்ள சைவ வெள்ளால மணமகளுக்கு வெளிநாட்டு பிரஜாவுரிமை உடைய மணமகன் தேவை. தொடர்புகளுக்கு 077 8939 397.

33 வயதுடைய ரேவதி நட்சத்திரம், செவ்வாய் குற்றமுடைய அரச உத்தியோகம் செய்யும் சைவ வெள்ளால மணமகனுக்கு உத்தியோகத்தில் உள்ள அல்லது க.பொ.த. உயர்தரம் கற்ற மணமகள் தேவை. தொடர்புகளுக்கு 077 8939 397.

38 வயதுடைய அத்தம் நட்சத்திரம் செவ்வாய் குற்றமுடைய B.sc பட்டம் பெற்று லண்டனில் பிரஜாவுரிமை உடைய சைவ வெள்ளால மணமகனுக்கு படித்த மணமகள் தேவை தொடர்புகளுக்கு 077 8939 397.

31 வயதுடைய அத்தம் நட்சத்திரம், செவ்வாய் குற்றமுடைய பிரான்ஸ் நாட்டு பிரஜாவுரிமை உடைய சைவ வெள்ளால மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்புகளுக்கு 077 8939 397.

36 வயதுடைய ஆயிலியம் நட்சத்திரம், செவ்வாய் குற்றமுடைய லண்டன் பிரஜாவுரிமை உடைய சைவ வெள்ளால மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்புகளுக்கு 077 8939 397.

47 வயதுடைய அத்தம் நட்சத்திரம், செவ்வாய் குற்றமுடைய பிரான்ஸ் நாட்டு பிரஜாவுரிமை உடைய சைவ வெள்ளால மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்புகளுக்கு 077 8939 397.

30 வயதுடைய ரோகினி நட்சத்திரம் செவ்வாய் குற்றமுடைய அரச உத்தியோகத்தில் இருக்கும் சைவ வெள்ளால மணமகனுக்கு உத்தியோகத்தில் இருக்கும் மணமகள் தேவை. தொடர்புகளுக்கு 077 8939 397.

30 வயதுடைய திருவோணம் நட்சத்திரம் செவ்வாய் குற்றமுடைய அரச உத்தியோகத்தில் உள்ள சைவ வெள்ளால பட்டதாரி மணமகனுக்கு படித்த மணமகள் தேவை. தொடர்புகளுக்கு 077 8939 397.

32 வயதுடைய சதய நட்சத்திரம் செவ்வாய் குற்றமுடைய பட்டம் பெற்று தற்போது வங்கியில் கடமையாற்றும் சைவ வெள்ளால மணமகனுக்கு உத்தியோகத்தில் உள்ள மணமகள் தேவை தொடர்புகளுக்கு 077 8939 397.

## மணமகன் தேவை

27 வயதுடைய உத்தரட்ட நட்சத்திரத்தில் செவ்வாய் குற்றமற்ற சைவ வெள்ளால உத்தியோகம் செய்யும் மணமகளுக்கு உத்தியோகம் செய்யும் மணகன் தேவை. தொடர்புகளுக்கு 077 8939 397.

37 வயதுடைய உத்தரம் நட்சத்திரத்தில் செவ்வாய் குற்றமற்ற அரச சேவையில் உள்ள சைவ வெள்ளால மணமகளுக்கு நல்ல உயர் பதவியிலுள்ள மணமகன் தேவை. தொடர்புகளுக்கு 077 8939 397.

27 வயதுடைய பூசம் நட்சத்திரத்தில் செவ்வாய் குற்றமற்ற ஆசிரியையாக கடமையாற்றும் சைவ வெள்ளால மணமகளுக்கு அரச உத்தியோகம் செய்யும் சைவ வெள்ளால மணமகன் தேவை. தொடர்புகளுக்கு 077 8939 397.

29 வயதுடைய கேட்டை நட்சத்திரம், ஆசிரியையாக கடமையாற்றும் சைவ வெள்ளால மணமகளுக்கு உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ மணமகன் தேவை. தொடர்புகளுக்கு 077 8939 397.

27 வயதுடைய ரேவதி நட்சத்திரம் செவ்வாய் குற்றமுடைய அரச சேவையில் பணிபுரியும் சைவ வெள்ளால மணமகளுக்கு அரச உத்தியோகம் செய்யும் மணமகன் தேவை. தொடர்புகளுக்கு 077 8939 397.

26 வயதுடைய அத்த நட்சத்திரம் செவ்வாய் குற்றமுடைய வங்கியில் கடமை புரியும் சைவ வெள்ளால மணமகளுக்கு உயர் பதவியிலுள்ள அரச உத்தியோகம் செய்யும் மணமகன் தேவை. தொடர்புகளுக்கு 077 8939 397.

32 வயதுடைய புனர்பூசம் நட்சத்திரம் செவ்வாய் குற்றமற்ற சைவ வெள்ளால பட்டதாரி மணமகளுக்கு உத்தியோகத்தில் இருக்கும் பட்டதாரி மணமகன் தேவை. தொடர்புகளுக்கு 077 8939 397.






சாரதி தேவை:- சாரதி அனுமதிப்பத்திரம் அவசியம். திருகோணமலை மற்றும் அதன் அண்டிய பகுதிகளின் வீதிகள் நன்றாக தெரிந்திருத்தல அவசியம. 45 வயதிற்கு குறைவானவராக இருக்க வேண்டும். தொடர்புகளுக்கு:- **076-6203876 / 0727042649.**

**ஆடைத் தொழில் வேலைகள்** சம்பளம் 25,000 ரூபா தொடக்கம் 30,000 ஆயிரம் ரூபா வரை வயது எல்லை 18 தொடக்கம் 45 வயதிற்குள் இருக்க வேண்டும். தொடர்புகளுக்கு **076-6203876 / 0727042649.**

விற்பனை உதவியாளர்கள் கல்வி பொதுதராதர சாதாரனதரத்தில் சித்தி ஆங்கில அறிவு கணனி அறிவு ஒரு வருட அனுபவம் அவசியம் ஆண்கள் மட்டும்வயது 20 தொடக்கம் 25 வயதிற்குள் இல.20 கார்கில்ஸ் ஸ்குயார் கட்டிட தொகுதி யாழ்ப்பாணம். தொடர்புகளுக்கு:- **0771795833, 0778609784.**

**Bajaj pulsar** விற்பனைக்குண்டு:- தொடர்பு கொள்ளவும் **0756748978**, விலை 245,000. **2014** ம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்டது. **3000** கிலோ மீற்றர் துாரம் ஓடப்பட்டுள்ளது.

**Hero Pleasure விற்பனைக்குண்டு:-** தொடர்பு கொள்ளவும 076 66557807, விலை 125,000. **2011** ம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்டது. **21,000** கிலோ மீற்றர் துாரம் ஓடப்பட்டுள்ளது.

**காணி விற்பனைக்குண்டு:-** யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியில், தொடர்புகளுக்கு சரோஜினி, 0777918342. 0775505355. 0776532365. விலை 3,850,000 பேசி தீர்மானிக்கலாம். நில வகை விவசாய மற்றும் வர்த்தக குடியிருப்பிற்குரியது. நில அளவு 18 பேர்ச்

**வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு:-** யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில், தொடர்புகளுக்கு ராஜ் 0771074366 . விலை 6,000,000 நில அளவு 20 பேர்ச், வீட்டின் பருமன் 2100 சதுர அடி 4 படுக்கையறைகளையும் 2 குளியல் அறைகளையும் கொண்டது.

**காணி விற்பனைக்குண்டு** :- யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் பகுதியில், தொடர்புகளுக்கு பாலா 0776570823 . விலை 6,000,000 ( பேசி தீர்மானிக்கலாம்) நில அளவு 125 சதுர அடி

**காணி விற்பனைக்குண்டு:-** யாழ்ப்பாணம் நாவற்குழிப் பகுதியில், தொடர்புகளுக்கு ரகு 0776570823 . விலை 6,000,000 ( பேசி தீர்மானிக்கலாம்) நில அளவு 125 சதுர அடி

கட்டிடம் வாடகைக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதியில் 5000 சதுர அடி தொடர்புகளுக்கு 0777 696443.

பருமன் 1000 சதுர அடி 3 படுக்கையறைகளையும் 1 குளியறை மற்றும் ஒரு மண்டபத்தினையும் கொண்டது.

## வேலைவாய்ப்பு

### PHP/MySQL Developer

AgoySoft (Pvt) Ltd

founded in the year 2010, AgoySoft is a limited liability company with offices in London, United Kingdom, Colombo and Jaffna Sri Lanka. AgoySoft developing software, online concept and mobile applications for local and foreign clients.

Software Engineer [PHP] (Jaffna)

The Software Engineer will be a member of a Project Team that will play a key role in software development with high emphasis towards unit testing to achieve best software quality. The Position also includes requirement analysis, design and documentation adhering to the best practices in Software Engineering.

DUTIES & RESPONSIBILITIES

• Good Knowledge in trouble shooting and performance optimization and database programing knowledge(MySQL & Stored Procedures)

• Extensive knowledge in OOP concepts and core Java concepts (java optional)

• Thorough and in-depth knowledge in performance and efficiency related issues in programing

• Understanding of data volumes involved with queries and query optimization

POSITION SPECIFICATIONS

Bachelors Degree in Computer Science or equivalent from a recognized university or institute

An Engineer with a minimum of two years' experience

Please forward detailed curriculum vitae with a recently taken photograph and names and contact numbers of two non related referees on or before 20th of June 2015 to:career@agoysoft.com / agoysoft@gmail.com Contact : 0774308010

**CUstomer care vacancy** We have Recruit Staffs for customer care call center Please kindly send your CV to Sherena987@gmailcom

வவுனியாவில் வீடு வாடகைக்கு தேவை தொடர்புகளுக்கு லதீப் 0770702280. வவுனியா நகர்புறம் , குருமன்காடு ,இறம்பைக்குளம், வைரவபுளியங்குளம் ஆகியப் பகுதிகள் விரும்பத்தக்கது.

காணி விற்பனைக்குண்டு வவுனியா நகரில் இருந்து 6.5 கிலோ மீற்றர் துாரத்தில் காணி அமைந்துள்ளது. நில அளவு 4 ஏக்கர் ஆகும். தொடர்புகளுக்கு 0772713757. விலை 240,000

வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு கித்துல் வீதி வவுனியாவில் (பொது வைத்தியசாலைக்கருகில்) ,தொடர்புகளுக்கு 0779180866. விலை 17,000,000, பேசி தீர்மானிக்கலாம். நில அளவு 48 பேர்ச்சஸ், வீட்டின் பருமன் 11000 சதுர அடி 3 படுக்கையறைகளையும் 2 குளியறை கொண்டது.

Alsesan இன வகையினை சேர்ந்த 3 நாய் குட்டிகள் விற்பனைக்குண்டு. விலை 15,000. தொடர்புகளுக்கு:- 071 9253996

பறவைகள் விற்பனைக்குண்டு.விலை 500 ரூபா. தொடர்புகளுக்கு விஸ்னு :-0774747488.

Doberman இன வகை நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. விலை 15,000 ( பேசி தீர்மானிக்கலாம்) ஆண் பெண் 6 குட்டிகள் உண்டு. எட்டுகிழமைகள் வயதுடையது. பெரிய தலையுடைய பிறவுன் குட்டிகள். தொடர்புகளுக்கு 0774147463

விறாத்து கோழி குஞ்சுகள் விற்பனைக்குண்டு. நல்ல ஆரோக்கியமான ஊர் கோழி குஞ்சுகள் விற்பனைக்குண்டு. பத்திய உணவுகேற்ற தரமான நோய் தாக்கமற்ற கோழி குஞ்சுகள் பெற விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்:- 07766407925. விலை 380 ரூபா

love birds விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு 0770280471. விலை 550 ரூபா (பேசி தீர்மானிக்கலாம்)

German Shepherd நாய்குட்டிகள் விற்பனைக்குண்டு. 40 நாட்கள் வயதுடையது. விலை 15,000. தொடர்புகளுக்கு 0776225283

management We Are Multinational Company.*Free 3-6 months Management Training ( Until become a Manager )*Free Language Training Qualifications Need.*Age 18-28*Campus selected or GCE O/L, A/L.[ School leavers and this year O/L faced alsoWelcome ]During Training Period You Can Increase Your Income 10000-25000. After Training BASIC Salary Call now 756880347 Mr: Anojan anojlee2014.al@gmail.com.

ACCOUNT ASSISTANT We are seeking for Account Assistant Prepare Petty cash Voucher & Maintains petty cash book.The Job function listed is not exhaustive and shall also include any responsibilities deemed necessary by the supervisor if & when required.

REQUIREMENT'SRelevant professional qualification in Administration & AccountingPart Qualified in AAT/CIMA or similar professional bodies.Excellent communication skillsA good command of oral & written Sinhala & English LanguagesMinimum 1 year experience in a relevant area .School leavers (G.C.E.A/L Comm) also can

apply.infassky@gmail.com.

DRAFTSMEN(2POSITION) Requirements-Experience using Auto CAD 2D to a high levelAccurately produce component drawings and assembly drawingsAble to produce accurate work in a busy and faced paced environment more info - strcom7@gmail.com Please Forward Complete Resume With Contact Details Within 5 Days Of This Advertisement.

**Construction vacancies**post- Construction vacanciessite supervisors QSdraftsman Qalification we need experience apply u r cv- abs.pvtcompany@gmail.com


மிகுதி 9ம் பக்கம்




| யாழ்ப்பாணம் – கொழும்பு | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 12.00am | 6.45am | 4.30pm | 5.30pm | 6.45pm | 8.00pm | 9.00pm |

| யாழ்ப்பாணம் – கதிர்காமம் | யாழ்ப்பாணம் – பதுளை | யாழ்ப்பாணம் –மொனராகல |
|---|---|---|
| 6.20pm | 6.20am | 4.30am 10.00pm |

| யாழ்ப்பாணம் – கண்டி | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5.10am | 6.05am | 7.15am | 8.30am | 10.15am | 2.45pm | 7.15pm | 11.20pm |




# வடக்கு மாகாண புவியியல் அமைப்பு

| மாவட்டம் | மொத்த இடம் | | நிலப்பரப்பு | | நீர்ப்பரப்பு | |
|---|---|---|---|---|---|---|
| | Sq.km | Percent | Sq.km | Percent | Sq.km | Percent |
| வடமாகணம் | 8848.21 | 100.00 | 8545.35 | 96.58 | 302.90 | 3.42 |
| யாழ்ப்பாணம் | 1025.20 | 100.00 | 983.60 | 95.94 | 41.60 | 4.06 |
| கிளிநொச்சி | 1237.11 | 100.00 | 1192.81 | 96.42 | 44.30 | 3.58 |
| மன்னார் | 2002.07 | 100.00 | 1991.00 | 99.44 | 11.00 | 0.55 |
| முல்லைத்தீவு | 2616.90 | 100.00 | 2516.90 | 96.18 | 100.00 | 3.82 |
| வவுனியா | 1967.00 | 100.00 | 1861.00 | 94.61 | 106.00 | 5.39 |

**வணிகலயத்தில் விளம்பரம் செய்து உங்கள் வியாபாரத்தினை விருத்தி செய்யுங்கள்விளம்பர தொடர்புகளுக்கு**

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 077 7712722 | டேவநேசன் |
| வவுனியா | 076 7048606 | கலைச்செல்வன் |
| முல்லைத்தீவு | 077 0344864 | விஜயநாதன் |
| திருகோணமலை | 077 8721751 | றிச்சட்சன் |
| மட்டக்களப்பு | 077 8365661 | துஜான் |
| அம்பாறை | 075 6007508 | சங்கர் |

# விசயத்துடன் விவசாயம் ஜப்பான்




பிரதானமாக நான்கு தீவுகளையும், ஆயிரக்கணக்கில் சின்னஞ்சிறு தீவுகளையும் கொண்ட நாடு ஜப்பான். வடக்கே உள்ள கோக்கைடோ (Hokkaido) தொடங்கி, தெற்கில் கடைசியாக இருக்கும் கியுஷு (kiyushu) வரையிலுமாக மொத்த நீளம் சுமார் 1900 கிலோ மீற்றர். நாட்டின் பெரும்பாலான பகுதயில் மலைகளுக்கு இடையே எழில் மிகுந்த பள்ளத்தாக்குகளும் உண்டு.

ஜப்பானில் மொத்த நிலப்பரபில் 15% அளவுக்கு மட்டுமே விவசாயம் செய்வதற்கு ஏற்றதாக உள்ளது. விளைநிலம் குறைவு என்ற பிரச்சனை, ஜப்பானியப் பொருளாதாரத்திற்கு விடப்பட்ட பெரும் சவால் என்றால் அது மிகையில்லை. எனவே ஜப்பானிய விஞ்ஞானிகள், இருக்கிற குறைந்த அளவு விவசாய நிலங்களை வைத்துக் கொண்டு அதிகபட்சமாக விளைச்சலைப் பெறுவது எப்படி என்று கண்டறிந்து விவசாயத்துறையில் வெற்றிகரமாகக் கடைப்பிடித்து வருகிறார்கள்.

சமவெளிப் பகுதிகளில் மட்டுமின்றி, மலைப்பகுதிகளிலும் ஆங்காங்கே நிலங்களை சீரபடுத்தி, படிகள் போன்று நிலத்தினை வடிவமைத்து, விவசாயம் செய்கிறார்கள். பல்வேறு நாடுகளிலும் கடைப்பிடிக்கப்படும் விவசாயத் தொழில் நுட்பங்களையும், தங்கள் நாட்டுச் சூழ்நிலைக்கு ஏற்ப மாறுதல்கள் செய்து கையான்டு வெற்றி பெற்றுள்ளனர்.

வீரியமுள்ள விதைகள், புதிய நீர்ப்பாசன முறைகள், நவீன விவசாயக் கருவிகள், இரசாயன உர வகைகள் எல்லாமே ஜப்பானிய விவசாயிகளுக்கு விளைச்சலைப்பெருக்குவதில் கை கொடுக்கின்றன.

ஜப்பானியர்களின் பாரம்பரிய உணவு அரிசி என்பதால், அங்கு நெல் உற்பத்திக்கு முன்னுரிமை தரப்படுகிறது. அதன் படி மொத்த விவசாய நிலத்தில் நற்பது சதவீத பரப்பளவில் நெல் பயிரிடுவதற்கு பொருட் செலவு அதிகரித்துக் கொண்டு வருவதால் ஜப்பானிய அரசு விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்வதற்கான விலையை நிர்ணயம் செய்துள்ளது

சமீப காலமாக துரித உணவு மோகம் அதிகரித்து வருவதால் ஜப்பானியர்கள் உண்ணும் அரிசி உணவின் அளவு குறைந்து வருகிறது எனவே அரிசிக்குப் பதிலாக கோதுமை போன்றவற்றின் உற்பத்தியைப் பெருக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1946 ல் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு நிலச் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன அவை வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டகாரணத்தால் விவசாயத் துறை உத்வேகம் பெற்றது. அடுத்த சில ஆண்டுகளில் குத்தகை முறை விவசாயம் வெகுவாகக் குறைந்தது. 90 சதவீத விளைநிலங்கள் விவசாயிகளின் நேரடி விவசாயத்தின் கீழ் வந்தன.

உலகப் போரை அடுத்து ஏற்பட்ட கடும் உணவுப் பற்றாக்குறை,விவசாயத் துறையைப் பொருத்தவரை பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது.விலைவாசி உயர்வு,பணவீக்கம்,கறுப்புச்சந்தை என்று பல வீஷயங்கள் விவசாயத்துறைக்குச் சாதகமாக விளங்கி விவசாயிகளின் வருமானங்கள் பெருக வழிவகை செய்தன. பல குத்தகை விவசாயிகள் தங்கள் கடனைத் தீர்த்துவிட்டு,சொந்தமாக நிலம் வாங்கி விவசாயம் செய்ய முன்வந்தனர். அரசாங்கத்தின் கொள்கையும் விவசாயிகளுக்குச் சாதகமாக அமைந்தது. விவசாய மையங்களும், விவசாயச் சேவை மையங்களும் பெருமளவில் திறக்கப்பட்டன.

கூட்டுறவுத் துறையில் இருந்து குறைந்த வட்டிக்குக் கடனுதவி கிடைத்தது. வருமானம் அதிகரித்த நிலையில் படித்த, இளைய தலைமுறையைச் சேர்ந்த விவசாயிகள் தங்களது அதிகப்படியான வருமானத்தைத் தங்களுடைய விவசாயம் மேலும் அபிவிருத்தி அடைவதற்கு உதவும் வகையில் மறுபடியும் விவசாயத்திலேயே முதலீடு செய்ய முன்வந்தனர். புதிய விவசாய முறைகளைப் பின்பற்றினார்கள். நவீன உபகரணங்களைப் பயன்படுத்தி விவசாயம் செய்தனர். உலகப்போரை அடுத்த காலகட்டத்தில் ஜப்பானின் மக்கள் தொகையில் சுமார் 45சதவீத மக்கள் விவசாயத்தில் ஈடு பட்டிருந்தனர் ஆனால், தொழில் துறை கிடுகிடுவென்று முன்னேறும் வகையில் அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்தபொழுது, தொழில்த்துறையில் ஏராளமான எண்ணிக்கையில் தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். அதிகப்படியான தொழிலாளர்களை விவசாயத்துறையே தாரைவார்த்து கொடுத்தது. அதே நேரத்தில் விவசாயத்துறையில் ஏற்பட்ட தொழிலாளர்கள் குறைவினால் உற்பத்தி பாதிக்கபடாமல் பார்த்துக்கொண்டது ஜப்பானிய விவசாயிகளின் சாதனைதான். ஜப்பானிய விவசாயம் பெருமளவு இயந்திரங்கள் முலமாகவே நடைபெறுகின்றன. பாரம்பரிய விவசாய முறைகளுக்கு விடைகொடுத்துவிட்ட ஜப்பானிய விவசாயிகள், டிராக்டர்கள், அறுவடை இயந்திரங்கள் போன்றவற்றைப் பயன்படுத்துவதன் மூலமாக விவசாய தொழிலாளர்கள் தட்டுப்பாடு என்ற பிரச்சனையே இல்லாமல் விவசாயம் செய்கிறார்கள்.

1950 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த அரிசி உற்பத்தி 95 லட்சம் டன்னாக இருந்தது. ஆனால் 25 ஆண்டு காலத்தில் ஒருகோடியே முப்பது லட்சம் டன்னாக உயர்ந்துவிட்டது. அரிசி தேவை குறைந்து வருவதால் நெல்லுக்கு பதிலாக மற்றப்பயிர்களை விவசாயம் செய்து அவற்றின் உற்பத்தியை பெருக்க ஜப்பானிய அரசு திட்டம் தீட்டி செயல்படுத்தி வருகிறது. இதன் மூலம் காய்கறி உற்பத்தி கணிசமாக அதிகரித்துள்ளது.

அரிசிக்கு அடுத்ததாக ஜப்பானியர்கள் முக்கியமானதாக நினைக்கும் உணவு மீன். எனவே மீன் பிடிப்பது ஜப்பானியர்களின் முக்கிய தொழிலாக இருக்கிறது. சீனாவுக்கு அடுத்ததாக உலகில் அதிகளவு மீன் பிடிப்பது ஜப்பான்தான். உள்நாட்டு தேவை போக கணிசமான அளவில் மீன்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

**தேவநேசன்**

7ம் பக்க தொடர்ச்சி


LenovoLap Core2Duo /Touch Screen/+Wrnty

லேப்டப் விற்பனைக்குண்டு.தொடர்பு கொள்ளவும் திரு. எரிக் 077 6570751. விலை 17,500 Imported From USA3 months Warranty Lenovo X61,Intel Core2Duo 1.8 Ghz ,1 GB Ram , 80 GB HDD Card Reader , Wifi ,Touch Screen ,Stylus Pen , LanModem, Etc..

HP Mini-5101/ Cam/ 160GB/ 1GB/ Wrarranty லேப்டப் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும், 077 6570751. விலை 18,300 US imported with brand New conditionHp Mini 5101 ,Atom 1.6 GHz ,1 GB Ram,160 GB HDD Wifi , Inbuilt Web CameraLan ,Card Reader ,USB PORTS , VGA PORT , Grade A Condition , Three month Warranty.

TVS Apache 180 விற்பனைக்குண்டு. விலை 160,000 தொடர்பு கொள்ளவும், 076 6910212

Bike Type: Sports Start Type: Self Stroke (mm): 57.8Engine Displacement (cc): 177.4 Maximum Torque: 15.5 Nm 6500 rpm Fuel Type: Petrol Fuel Tank Capacity (litres): 16 2013 ம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்டது. 22,500 கிலோ மீற்றர் தூரம் ஓடப்பட்டுள்ளது.

BOLERO MAXI TRUCK விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும், 076 6910212 விலை 1,119500

Model Year : 2015 Engine : Direct Injection, Diesel,Cubic Capacity : 2523 Max Gross Power : 63 bhp @ 3200 r.p.m Max Gross Torque : 18kgm @ 1500 r.p.m Transmission : 4 forward, 1 reverse Suspension Front : Semi Elliptical Leaf Spring with Telescopic Double Acting ShockAbsorber.Rear : Semi Elliptical Leaf Spring with Telescopic Double Acting Shock Absorber.Brakes Front : Disc Type, Twin pot calliper &Tandem Booster Rear : Drum Type.Tyre Size : 195 x R15 Radial.Ground Clearance : 180 mm Max GVW : 2450 Kg Turning Circle Radius : 6.35 mTank Capacity : 45 Litres Payload ( in kg ) : 1000

# இலங்கையின் வடபுலத்தின் பொருளாதாரநடவடிக்கைகள் பற்றிய ஒரு நோக்கு



முதலில் வடமாகாண அபிவிருத்தி பொருளாதாரக் கொள்கை எந்தக் கட்டளைப் படிமத்தை சார்ந்தது என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.

1) பிரதேச அபிவிருத்தியூடாக தேசிய பொருளாதார அபிவிருத்தி செய்தல் என்ற இலக்குடன் செய்யப்படுகின்றதா?

2) போருக்கு பின்னரான புனர் நிர்மானம் மீள்கட்டுமானத்தை செய்தால் மற்றவை அதன் வழி முன்னெடுக்கப்படும் என்ற இலக்குடையதா?

3) இன முரண்பாடுகளை தீர்த்தல் என்ற வகையிலான இலக்குடன் பொருளாதார கொள்கை முன்னெடுப்பா?

4) போரால் பாதிக்க்பட்டவர்களுக்கான நிவாரணம் என்ற இலக்கு மாத்திரம் கொண்டதா?

5) பின்தள்ளப்பட்ட காலத்திற்கான விரைவான பொருளாதார முன்னேற்ற நடவடிக்கையா?

6) பூர்வீக குடிகள் பொருளதார மேற்கிளம்பலை எதிர்கொள்ளவிட்டால் (அவுஸடதிரேலியா ஆதிகுடிகள் மற்றும் ஐக்கிய அமெரிக்காவில் செவ்விந்தியர்) பார்த்துக்கொள்ளல் என்பதற்கமைவாக நுகர்வு மயமாக்கும் நடவடிக்கையா?

என்ற வகையில் இதனை நுணுக்கமாக நோக்க வேண்டும். இதற்கு பிரதேச அபிவிருத்தி சார்பான பேரின பொருளாதார கொள்கைகள் அரசியல் பொருளாதார கொள்கைகள் எவ்வாறு எவ்வடிப்டையில் வழங்கப்படுகிறது, செயற்படுத்தப்படுகிறது என்பதை தெளிவாக அறிந்துக்கொண்டு பின்னர் இப்பொருளாதார அபிவிருத்திக்கான சாதக பாதக தன்மைகளை நோக்க முடியும்.

பொதுவாக பொருளாதாரம் ஒன்றை உற்பத்தி துறை என்ற வகையில் முதற்துறை கைத்தொழில் துறை, சேவைத்துறையென வகுத்து அவற்றில் ஏற்படும் மாற்றங்களை பொருளாதார கட்டமைப்பு மாற்றம் என்ற வகையில் நோக்குவதுண்டு. இத்துறையில் உள்ளீட்டு சந்தையும் வெளியீட்டுச் சந்தையும் சிறந்த கட்டற்றமுறையில் உள்ளதா அல்லது கட்டுப்பாடுடையதா? அல்லது பெயரளவில் திறந்த சந்தையாக இருந்தாலும் அரசியல் பொருளதாரக் காரணிகளால் வரையரைகளை கொண்டதாக இருக்கின்றதா? என்பதை கருத்திற் கொண்டே அப்பிரதேச பொருதார கட்டமைப்பும் அதன் இயக்கமும் எவ்வாறு இருக்கின்றது என்பதனை கூற முடியும். 30 வருடங்களாக பிரதேச எல்லைக்குட்பட்டு உள்ளீடு வெளியீடுகளின் நுகர்வு தடைப்படுத்தப்பட்டோ மட்டுப்படுத்தப்பட்டதாகவோ இருந்ததால் பொருளதாரா செயற்பாடுகளில் முழுவீச்சையும் எந்த உற்பத்திதுறையிலும் பார்க்கமுடியவில்லை. இம் 30 வருடத்திலும் உலகலாவிய ரீதியில் பரவலடைந்த உலக மயமாக்கத்தின் விளைவை இலங்கையில் வடபுலம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்கள் எதிர்கொள்ளக்கூடியதாக இருந்ததால் அவை தமது பிரதேச பொருளதார கட்டமைப்பை அதற்கேற்ற வகையில் சரிபடுத்திக்கொண்டன. ஆனால் போருக்கு பின்னரே உலகமயமாக்கத்தை எதிர் கொள்ளக் கூடிய வாய்ப்பு இருந்ததால் எல்லா பொருளாதார செயற்பாட்டிலும் பின்தங்கிய நிலையிலேயே இருந்தது. இதனால் ஏ9 திறந்துவிடப்பட்ட பின்னர் ஏனைய பிரதேச பொருளாதாரங்களால் சுரண்டப்படும் நிலைக்கு தள்ளப்பட்டிருந்தது. ஏனைய பிரதேச பொருளாதாரங்களுடன் போட்டியிடும் வல்லமையை இழந்திருந்தது. குறிப்பாக முயற்சியாண்மை போதுமானதாக இருக்கவில்லை, இருக்கும் முயற்சியாண்மையும் பலவீனமானதாகவே இருந்தது. கட்டற்ற திறந்த சந்தையில் போட்டியிடும் வல்லமையை இழந்திருந்ததால் தென் இலங்கை வர்த்தகர்களின் சுரண்டலுக்கு இலக்காக வேண்டியிருந்தது. மனித மூலதனம் கூட தற்கால பொருளதார இயல்புக்கு ஏற்றதாக கட்டமைக்கப்பட்டதாக இருந்ததால் தொழில் பயிற்சியும் திறனும் இல்லாமல் வேலையின்மைக்குள் தள்ளப்பட்டிருந்தது.

மரபு உற்பத்திதுறைகளை சமகாலத்திற்கேற்ற வகையில் மீட்டெடுக்க முடியவில்லை. எல்லா பொருளாதார செயற்பாடுகளிலும் பின் தங்கிய நிலையில் இருக்க வேண்டியதாக இருந்தது. மீட்டெடுப்பதாயின் வடபுலத்திற்கான விசேடமான பேரின பொருளாதார கொள்கையை அரசாங்கம் முன்வைக்க வேண்டும். உள்ளீட்டு சந்தைகள் வெளியீட்டுச் சந்தைகள் நெறிப்படுத்தப்பட்டதாகவும், விசேடமானதாகவும்.

கட்டுப்பாடுகள் நிறைந்ததாகவும் இருக்க வேண்டும். இது புதிய அரசியல் பொருளாதார கொள்கையூடாகவே நிறைவேற்றக்கூடியதாக இருக்கும். அவ்வாறில்லாமல் கட்டற்ற திறந்த சந்தை அறிமுகப்படுத்தப்பட்டதால் இப் பிரதேச உற்பத்தியாளர்கள் விவேகப் பொறிமுறையூடான சந்தைபோட்டியூடாகமேல் எழுந்துவர முடியும். இப்பிரதேசத்தையும் அபிவிருத்தி செய்ய முடியும் என நினைப்பது தென்னிலங்கையில் பல் தேசிய நிறுவனங்களும், தேசிய முதலாளித்துவ கம்பனிகளும் இப்பிரதேசத்து வளங்களையும், உற்பத்தி மிகைகளையும் சுரண்டிச் செல்வதற்கு வாய்ப்பளிக்கப்பட்டதாகவே இருந்தது.

போருக்கு பின்னர் ஏ9 திறந்து விடப்பட்டதுடன் தொன்னிலங்கையிருந்து இப்பிரதேசத்தின் சந்தைக்ககுள் புகுந்து கொண்ட தேசிய முதலாளிகள் தங்கள் குளிரூட்டியுடன் கூடய பாரவூர்திகளை வடபுலத்து கடற்கரையோர கொள்வனவிற்காக கொண்டுவந்துள்னர். இதனால் 1980 களின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு பெற்றா மீன் சந்தைக்கு சென்ற பாரவூர்திகள் தொழில் இன்றி முடங்கிக் கிடக்கின்றன.அதில் தொழில் புரிந்த ஓட்டுனர்,துப்பரவாளர்,நடுவர் பொதியிடுவோர்,பனிக்கட்டி உற்பத்தி செய்வோர் தாழில் இழந்துள்ளனர். மீன்பிடிதுறை போல பல உற்பத்தி துறைகள் இவ்வாறே பாதிக்கப்பட்டுள்ளன. விவசாய உள்ளீடகள் விவசாய வெளியீடுகள் சந்தைப்படுத்தலிலும் இதே நிலைதான் உள்ளது.

உள்ளீட்டுச் சந்தையில் கெயிலீன் கொம்பனி ஆதிக்கம் செலுத்துகின்றது. (அதில் தொழில் புரிந்த ஓட்டுனர்,துப்பரவாளர்,நடுவர் பொதீகளாகவே, பனிகட்டு உற்பத்தி செய்வோர் தொழில் இழந்துள்ளனர். மீன்பிடிதுறை போல பல உற்பத்தி துறைகளும் அவ்வாறே பாதிக்கப்பட்டுள்ளன. விவசாய உள்ளீடுகள் விவசாய வெளியீடுகள் சந்தைப்படுத்தலிலும் இதே நிலை தான் உள்ளது. உள்ளீட்டுச் சந்தையில் கெயிலீன் கொம்பனி ஆதிக்கம் செலுத்துகின்றது) அதனால் இதுவரைக்கும் உள்ளீட்டுச் சந்தையில் பிரசன்னமாயிருந்த உள்ளூர் முயற்சியாளர்கள் தங்கள் தொழில்களை இழந்துள்னர். வெளியீட்டு சந்தைப்படுத்தலும் தென்னிலங்கை வாகனங்கள் விவசாய பண்ணை முகப்பில் கொள்வனவு செய்ய காத்து நிற்கின்றன. புதிய குளிரூட்டப்பட்ட நல் வாகனங்களில் வந்து வெங்காயம் பீற்றூட்,வாழைப்பழம், கொள்வனவு செய்கின்றனர். இதனால் உள்ளூர் போக்குவரத்து வாகனங்கள் தொழில் இழந்துள்ளனர். அத்துடன் கூடிய பெறுமானம்சார் வேலைவாய்ப்பையும் இழந்து நிற்கின்றனர் இப்பிரதேசத்து விவசாயதுறையினர்.

வடமாகாணத்தில் முக்கிய உற்பத்திதுறைகளை விவசாயமும் மீன்பிடியும் ஊட்டிய பெறுமான வசதிகளை இழந்திருப்பதால் வேலை வாய்ப்பையும் இழக்க வேண்டியதாக உள்ளது. இப் பிரதேசத்து கைத்தொழில்துறை மிகப் பலவீனமான நிலையில் உள்ளது. முன்னர் இருந்த சிறு சிறு கைத்தொழில் துறைகள் முழுவதும் அழிந்த நிலையிலுள்ளது. அலுமினியம் புடவைக் கைத்தொழில், கூரைத்தகடு உற்பத்தி, பழரச உற்பத்தி கைத்தொழில், குளிர்பான கைத்தொழில் போன்றன முற்று முழுதாக பாதிக்கப்பட்டதாகவே உள்ளது. இத் துறைகளில் வேலைவாய்ப்பையும் இழந்துள்ளோம். உற்பத்தி மிகைகளையும் இழந்துள்ளோம். வருமானத்தினையும் இழந்துள்ளோம். இச் சூழ்நிலையின் கீழ் எவ்வாறு பிரதேசத்து சேமிப்பை உயர்த்த முடியும்? எவ்வாறு முதலீட்டை அதிகரிக்க முடியும்.

போர் முடிந்த பின்னரும் பிரதேசத்தவர்களுக்கான மீன்பிடி வாய்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளது. தென்னிலங்கை மீனவர்களின் வருகையும் அதற்கான அரசாங்க அனுமதிகளும் இப்பிரதேச மீனவர்களின் வருமான வாய்ப்பை குறைத்துள்ளது. மீன்பிடியோடு போக்குவரத்து வியாபார நடவடிக்கைகளிலும் வாய்ப்பிழந்து இருப்பதால் மீன்பிடிதுறையிலிருந்து எந்த விதமாக சேமிப்பு அதிகரிப்பையும் எதிர்பார்க்க முடியவில்லை. எதிர்காலத்தில் இது இன்னும் மோசமாகலாம். விவசாயதுறையிலும் அவ்வாறான நிலையே நல்ல வளமுள்ள தோட்ட நிலங்களும் தென்னை பயிரிடு நிலங்களும் உயர்பாதுகாப்பு வலயம் என்ற வகையில் பாதுகாப்பு என்ற வகையில் அரசு வகைப்படுத்தி வைப்பதால் விவசாயிகளளின் வருமானமும் எதிர்பார்த்த அளவு அதிகரிக்க முடியவில்லை. இதனால் அத்துறையின் சேமிப்பும் வீழ்ச்சியடைந்துள்ளது. அதனால் அத்துறையிலும் முதலீடு அதிகரிக்கும் வாய்ப்பில்லை.

இந்நிலையில் இப்பிரதேசத்தின் பொருளாதாரம் அறிவுசார் பொருளாதாரமாக மாற்றமடைய வேண்டியதே இன்றைய தேவையாக உள்ளது. புதிய உற்பத்திதுறைகளை உருவாக்க வேண்டும். சேவைதுறைசார் உற்பத்திதுறைகளை உருவாக்கும் வகையில் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த உற்பத்திதுறைகளை உருவாக்க வேண்டும். விளம்பரத்துறை அச்சிடல்துறை அழகு சாதனப்பொருள் உற்பத்தி வாசனைதிரவிய உற்பத்தி போன்றவற்றிலும் கணனிதுறை சார்ந்த மென்பொருள் உற்பத்தி இணையத்தள வலைபின்னல் செயற்திட்டங்கள் போன்ற அறிவுசார் உற்பத்தி பொருட்களை உற்பத்தி செய்து சந்தைக்கு விடுவதன் ஊடாகவே சந்தையில் போட்டியிட முடியும். அதில் கவனம் செலுத்த முடியவில்லையாயின் நாம் தனித்து நுகரும் வர்த்தகமாக மாறி அவுஸ்திரேலியாவின் பழங்குடிகள் போலவும் அமெரிக்காவின் செவ்விந்தியர் போலவும் இருந்து தேசிய பொருளதாரத்தில் எந்தப் பங்கையும் பெற்றுக்கொள்ள முடியாத தங்கி வாழ்வோராக மாறி விடுவோம். இதனைப் மாற்றி அமைக்க முடியாத பொருளாதார கொள்கை இருக்குமானால் வடபகுதி மக்கள், அவுஸ்திரேலிய மற்றும் அமெரிக்க பழங்குடிகளின் நிலைக்கு மாறுவதற்கான முன்னெடுப்புக்கள் நடைபெறுவதாகவே அமையும்.

**பேராசிரியர் விபி . சிவநாதன்**

**தலைவர், பொருளியல்துறை,யாழ்பல்கலைகழகம்**


The Finance Co. PLC
TFC
ESTD-1940
YOUR SUCCESS IS OUR GOAL
த பினான்ஸ்
75ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடடியுள்ளது த பினான்ஸ்
நிறுவனம் யாழ் மக்களுக்கு பல்வேறுபட்ட நிதி உதவிகளை வழங்குகின்றது.
வெளிநாடு செல்வதற்கு தேவையான பணம் மற்றும் வெளிநாட்டிலுள்ள
உங்களுக்கு இல்லமொன்றை அமைப்பதற்கான நிதி உதவிகளை
செய்து தருகிறார்கள் த பினான்ஸ்
வியாபாரத்தை மேம்படுத்தவும் உங்கள் பிள்ளைகளை
கற்பிப்பதற்கு தேவையான நிதியினை உடனடியாகப் பெற்றுக்கொள்ளவும் த
பினான்ஸை இப்போதே நாடுங்கள்
இல.249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.


SIKARAM
VISA
எந்தவொரு நாட்டுக்குமான
எந்த வகை விசா என்றாலும்
அதற்கான ஒழுங்குகளை செய்து
தருகின்றார்கள்
THANK YOU!
INTI
சிகரம் பிறைவெட் லிமிட்டட்
275, 2/1, மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம். (வைத்தியசாலை பின்புறம்)







வெளியீடு:- வணிகலயம் வர்த்தக விளம்பர சேவை, நவீன சந்தை மேல் மாடி, யாழ்ப்பாணம்.